*68*

# அடக்கம்

## (27:57-66)

*அரிமத்தியாவூர் யோசேப்பு இயேசுவின் சரீரத்தை அடக்கம் செய்யப் பிலாத்துவினிடம் அனுமதி பெற்றபின்பு, அவர் அந்த சரீரத்தைத் தமது புதிய கல்லறையில் வைத்தார் (27:57-61). பெரிய ஓய்வு நாளான அடுத்த நாளில், கல்லறையில் காவல் காக்க யூதத்தலைவர்களுக்குப் பிலாத்து அனுமதி அளித்தார். அவர்கள் இயேசுவின் சரீரத்தைச் சீஷர்களில் யாராவது களவாடிக் கொண்டுபோய்விட்டு அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்தார் என்று உரிமை கோருதலைத் தவிர்க்க விரும்பினர் (27:62-66).*

### கிறிஸ்துவின் சரீரம் அடக்கம் பண்ணப்படுதல் (27:57-61)

***57** சாயங்காலமானபோது, இயேசுவுக்குச் சீஷனும் ஐசுவரியவானுமாயிருந்த யோசேப்பு என்னும் பேர்கொண்ட அரிமத்தியா ஊரானாகிய ஒரு மனுஷன் வந்து,*

***58** பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டான். அப்பொழுது, சரீரத்தைக் கொடுக்கும்படி பிலாத்து கட்டளையிட்டான்.*

***59** யோசேப்பு அந்தச் சரீரத்தை எடுத்து, துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றி,*

***60** தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான்.*

***61** அங்கே மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள்.*

*ஓய்வு நாள் அணுகிக் கொண்டிருந்தபடியால், யூதத்தலைவர்கள் இயேசு மற்றும் அவருடன் சிலுவையில் அறையப்பட்டிருந்த இருமனிதர்கள் ஆகியோர்களின் மரணத்தைத் துரிதப்படுத்த, அவர்களின் கால்களை முறிக்குமாறு பிலாத்துவிடம் வேண்டிக்கொண்டதாக யோவான் சுவிசேஷம் குறிப்பிடுகிறது (யோவான் 19:31). முறிந்து போன கால்களுடன் அவர்கள் சுவாசிப்பதற்காகத் தங்களை மேலே எழுப்ப இயலாதிருப்பார்கள், மற்றும் அவர்கள் நேர்ப்பொருளில் மூச்சுத் திணறுவார்கள். போர்வீரர்கள், இரு கள்வர்களின் கால் எலும்புகளையும் முறித்தனர், ஆனால் இயேசு மரித்திருந்ததைக் கண்ட படியால், அவரது (இயேசுவின்) கால்களை அவர்கள் முறிக்கவில்லை. இது சங்கீதம் 34:20ன் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றிற்று:*

*“அவனுடைய எலும்புகளையெல்லாம் காப்பாற்றுகிறார்; அவைகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை” (யோவான் 19:36). ஒரு போர்வீரர் இயேசு மரித்ததை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக, அவரது விலாவை ஈட்டியால் குத்தினார், மற்றும் “உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது” (யோவான் 19:34).*

*வெள்ளிக்கிழமையான அந்த நாள், ஓய்வு நாளுக்கு “ஆயத்த நாளாக” இருந்தது. யூதத்தலைவர்கள், மரித்த உடல்கள் இரவு முழுவதும் சிலுவைகளில் தொங்குவதை விரும்பவில்லை (யோவான் 19:31). மரத்தில் தூக்கப்பட்டவன் எவனும் சூரியன் மறைவதற்குள் இறக்கி அடக்கம்பண்ணப் படவேண்டும் என்று நியாயப்பிரமாணம் கூறியது (உபாகமம் 21:22, 23). இயேசு மாலை 3:00 மணிக்கு இறந்தார். ஓய்வுநாள் மாலை 6:00 மணிக்குத் தொடங்கிற்று என்பதால், யூதர்கள் சிலுவைகளில் இருந்து உடல்களை எடுத்துப்போட முயற்சி செய்தனர்.[1]*

*“ஆயத்தநாள்” (paraskeuē) என்பது “வெள்ளிக்கிழமைக்”கான ஒரு நுட்பச் சொற்றொடராக இருந்தது, மற்றும் அது நவீன கிரேக்க மொழியில் தக்கவைக்கப்பட்டுள்ளது. இந்த ஓய்வுநாள் ஒரு மிகப் பெரிய பரிசுத்த நாளாகவும் இருந்தது, ஏனெனில் இது பஸ்கா ஓய்வுநாளாக இருந்தது (யோவான் 19:31). இயேசுவைப் பின்பற்றியவர்கள், தங்கள் அவசரத்தினால், வழக்கமாகச் செய்யப்பட்டபடி அவரது சரீரத்தை அடக்கம் பண்ணுவதற்குத் தக்கவகையில் அபிஷேகம் செய்யவில்லை. அதனால்தான் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் பெண்கள் அவரது கல்லறைக்குச் சென்றனர் (லூக்கா 23:55-24:1).*

***வசனம் 57. யோசேப்பு** என்பவர் யூதேயாவின் **அரிமத்தியா** நகரத்தைச் சேர்ந்தவராக இருந்தார். இது ராமா (அல்லது இராமதாயீம் சோப்பீம்) என்ற சாமுவேலின் நகரத்திற்கு இணையானதாக இருந்திருக்கலாம் (1 சாமுவேல் 1:1, 19, 20). இன்றைய நாட்களில் இந்த நகரம் “ரென்ட்டிஸ்” என்று அழைக்கப்படுகிறது.*

*யோசேப்பு, சனதெரீன் சங்கத்தின் “கனம் பொருந்திய ஆலோசனைக்காரராக” இருந்தார் (மாற்கு 15:43; லூக்கா 23:50). இவரது ஆலோசனை பொதுவாக நாடப்பட்டும் கவனிக்கப்பட்டும் இருந்தது என்பது உறுதி. இருப்பினும் இவர், இயேசுவைக் குறித்து யூதர்களின் செயல்பாடுகளுக்குச் சம்மதியாதவராக இருந்தார் (லூக்கா 23:51). இந்த **ஐசுவரியவான்** இராஜ்யத்திற்காகக் காத்திருந்தார் (மாற்கு 15:43). இந்த இடம் வரையிலும் இவர் **இயேசுவுக்கு இரகசியமான சீஷராயிருந்தார்** (யோவான் 19:38; காண்க 12:42), ஆனால் இப்போது அவர் தமது இணைவை அறியச் செய்தார். உற்சாகமூட்டக் கூடியவகையில், “சிலுவையில் அறையப்படுதல் என்பது இயேசுவைப் பின்பற்றியவர்களில் பலரை ஒளிந்து கொள்ளும்படி அனுப்பிய அதே வேளையில், யோசேப்பின் மீது எதிர்மறை செயல்விளைவைக் கொண்டு அவரைத் திறப்பிற்கு வெளியே கொண்டு வந்தது.”[2]*

***வசனம் 58.** இயேசு சிலுவையில் அறையப்பட்டிருந்ததால், அவரது உடலை அடக்கம் செய்ய, ரோம அதிகாரிகளிடத்தில் இருந்து அனுமதி பெறப்பட வேண்டியிருந்தது. இயேசுவின் குடும்பத்தில் ஒரு உறுப்பினரோ அல்லது அவரது அப்போஸ்தலர்களில் ஒருவரோ சரீரத்தைக் கேட்பார் என்று ஒருவர் எதிர்பார்த்திருக்கலாம். இருந்த போதிலும் விஷயம் இவ்வாறு இருக்கவில்லை.*

மறைவான நிழல்களில் இருந்து வெளியே வந்த யோசேப்பு, "துணிந்து" (மாற்கு 15:43) **பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தை,** தாம் அடக்கம் பண்ணும்படி கேட்டார். இயேசு ஏற்கனவே மரித்துவிட்டார் என்பதைக் கேள்விப்பட்ட ஆளுநர் ஆச்சரியப்பட்டு, அந்த மரணத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளும்படி நூற்றுக்கு அதிபதி ஒருவரிடத்தில் ஆணைபிறப்பித்து, அதை நிச்சயப்படுத்திக் கொண்டு (மாற்கும் 15:44), இயேசு மரித்துப் போனார் என்பதை அறிந்து யோசேப்புக்கு அவரது (இயேசுவின்) சரீரத்தை எடுத்துக் கொள்ள அனுமதி அளித்தார் (மாற்கு 15:45).

***வசனம் 59.*** **யோசேப்பு** அந்தச் **சரீரத்தை** சிலுவையில் இருந்து எடுத்து (மாற்கு 15:46; லுக்கா 23:53), **துய்யதான மெல்லிய துப்பட்டியிலே சுற்றினார்.** இது மாத்திரமே சுற்றப்பட்ட ஒரே ஒரு வெளித் துணியாக அல்லது சவத்துணியாக இருந்திருக்க வாய்ப்புள்ளது. இயேசுவின் சவ அடக்கச் செயல்முறை பற்றி யோவான் அதிக விபரத்தை அளிக்கிறார். அவரது உடல் "யூதர்கள் அடக்கம்பண்ணும் முறைமையின்படியே" "சுகந்தவர்க்கங்களுடனே சீலைகளில் சுற்றிக் கட்டப்பட்டது" (யோவான் 19:40). தைலத்தில் தோய்த்து எடுக்கப்பட்ட துணிப்பட்டிகளைப் பயன்படுத்தியதில் யூதர்கள், மரித்தோரை, எகிப்தியர் செய்தது போன்றே பெரும்பாலும் சுற்றிக் கட்டினர், அந்த உடல் மூடப்படும் வரை அவர்கள் இவ்வாறு துணியால் சுற்றிக் கட்டினர்.[3] லாசரு தமது கல்லறையில் இருந்து வெளியே வந்போது, "அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது" (யோவான் 11:44).

யோசேப்பு தாமே இயேசுவை அடக்கம் பண்ணவில்லை. அவருடன் யூதர்களுக்குள் இருந்த இன்னொரு அதிகாரியான நிக்கொதேமு என்பவரும் இணைந்து கொண்டார், அவர் ஒரு இரவில் இயேசுவினிடத்தில் வந்திருந்தவராவார் (யோவான் 3:1-21). யோவான் 7:50, 51ன்படி, சனதெரீன் சங்க உறுப்பினர் என்ற வகையில் அவர், இயேசு நியாயமாக விசாரிக்கப்பட வேண்டும் என்று தற்காப்பு வாதம் செய்திருந்தார். அந்த வேளையில் அவர், கிறிஸ்துவின் சீஷராக இருந்ததாகக் குற்றம் சாட்டப் பட்டிருந்தார். அவர் இரகசிய சீஷர்களில் ஒருவராக இருந்தார், ஆனால் அவர் தமது சீஷத்துவத்தை இனியும் இரகசியமாய்க் காக்க மாட்டார். அவர் இயேசுவின் அடக்கத்திற்கு விலையுயர்ந்த தைலத்தை அளித்தார்: அது வெள்ளைப்போளமும் கரியபோளமும் கலந்து ஏறக்குறைய நூறு இராத்தல் இருந்தது (யோவான் 19:39).

***வசனம் 60.*** இயேசுவின் உடல் [அடக்கத்திற்கு] தயார் செய்யப்பட்ட பின்பு, யோசேப்பு அதை, **தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையில் அதை வைத்தார்.** இந்த உண்மை ஒவ்வொரு கோணத்தில் இருந்தும் முனைப்பானதாக உள்ளது (1) யோசேப்பின் இரக்கமான செயல் ஒரு மாபெரும் தியாகமாகவே இருந்தது. அவர் தமக்கென்று ஏற்படுத்தி வைத்திருந்த சிலவற்றை கொடுத்து விட்டார். இயேசு ஒரு குற்றவாளி என்று ஆக்கினைத் தீர்ப்புக்கு உட்பட்டிருந்ததால், யூதர்கள் அவருடன் அந்தக் கல்லறையில் இனி யாரையும் புதைக்க அனுமதிக்க மாட்டார்கள் என்ற நிலை ஏற்படலாம். ஒருவேளை யோசேப்பு இன்னொரு கல்லறையை வாங்க வேண்டியிருக்கும். (2) ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட குற்றவாளிகள் கனத்திற்குரிய

அடக்கங்களைப் பெற்றதில்லை. சனதெரீன் சங்க உறுப்பினருக்குரிய பயன்படுத்தப்பட்டிராத ஒரு கல்லறையில் அடக்கம் பண்ணப்படுதல் (யோவான் 19:41)[4] என்பது, அப்போதுதான் சிலுவையில் அறையப்பட்டிருந்த ஒருவருக்குப் பேசப்பட இயலாத கனத்திற்குரிய விஷயமாக இருந்தது! (3) இயேசுவின் அடக்கம் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக இருந்தது. இது இந்த கல்லறை "பாறையிலே வெட்டப்பட்டிருந்த படியால்" - இயற்கையிலேயே ஆன கெபிக்குப் பதிலாக "ஐசுவரியவானுக்கு" (27:57) ஆகும் செலவை உறுதிப்படுத்திற்று. பாடுபடும் ஊழியக்காரர் பற்றி ஏசாயா, "துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக்குழியை நியமித்தார்; ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவானோடே இருந்தார்" என்று தீர்க்கதரிசனம் உரைத்திருந்தார் (ஏசாயா 53:9).

இயேசுவின் உடல் **கல்லறையிலே பாதுகாப்பாக வைக்கப்பட்ட உடனே, யோசேப்பு கல்லறையின் வாசலில் ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்தார்.** அந்தக் காலத்தில் இருந்த சில கல்லறைகளைப் போன்று, இதுவும் அனேகமாக, கல் புரட்டி வைக்கப்படும் தடம் ஒன்றைக் கொண்டிருந்து இருக்கும்.[5] கல்லே பெரியதாகவும் கனமானதாகவும் இருந்ததால், உயிர்த்தெழுந்த நாளில் அதிகாலையில், இயேசுவின் உடலை அபிஷேகிக்க வந்த பெண்கள், அதைத் தங்களுக்காக யார் நகர்த்துவார் என்று ஆச்சரியப்பட்டனர் (மாற்கு 16:3, 4). இப்படிப்பட்ட கற்கள், கல்லறைத் திருடர்களுக்கு ஒரு அச்சமூட்டும் தடுப்பாகப் பயன்படும்; மற்றும் மிக முக்கியமாக, இவைகள் இறந்த உடல்களைக் காட்டு மிருகங்கள் வந்து உண்பதில் இருந்து தடுக்கும். இயேசுவின் கல்லறை, தாழ்வான நுழைவாயிலைக் கொண்டிருந்தது; ஏனெனில் அது வெறுமையாக இருந்தபோது, பேதுருவும் யோவானும் அதற்குள்ளே குனிந்துபார்க்க வேண்டியிருந்தது (யோவான் 20:5). இது அந்தக் காலத்தில் கல்லறைகள் கட்டப்பட்டிருந்த விதத்திற்குச் சீர்பொருத்தமாக இருந்திருக்கும்.

இயேசுவின் கல்லறை, சிலுவையில் அறையப்படுதல் நடந்திருந்த அதே பகுதியில் இருந்த ஒரு தோட்டத்தில் இடம் பெற்றிருந்தது (யோவான் 19:41). இன்றைய நாட்களில் எருசலேமுக்குச் செல்லும் பார்வையாளர்களுக்கு இந்தக் கல்லறை இருந்த இடம் என்று இரண்டு பாரம்பரிய இடங்கள் காண்பிக்கப் படுகின்றன (27:33ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இவற்றில் முதலாவது, ஹோலி செப்பல்ச்சர் கோவிலின் உட்புறத்தில், கொல்கொதாவுடன் இடம் பெற்றுள்ளது. இந்தக் கல்லறையின் பின்புறத்தில் உள்ள பாரம்பரிய வரலாறு -இது தனது தோற்ற கால நிலையில் பாதுகாக்கப் பட்டிருக்க வில்லை - (நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த) கான்ஸ்ட்டன்டைன் மற்றும் அவரது தாயார் ஹெலனா ஆகியோரின் காலம் பின்நோக்கிப் செல்லுகிறது. இது இயேசுவின் கல்லறையினுடைய உண்மையான இடமாக இருக்கலாம் என்று சிலரால் நம்பப்படுகிறது.

தோட்டக் கல்லறை என்ற இரண்டாவது இடமானது, கோர்டனின் கல்வாரிக்குத் தூரத்தில் இருப்பதில்லை. இருப்பினும் இந்தப் பாரம்பரியம் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை மாத்திரமே பின்செல்லுகிறது. இந்தக் கல்லறை, இயேசுவின் கல்லறையில் இருந்தது போன்று, உருட்டும் கல் ஒன்றைக் கொண்டிருக்கிறது, ஆனால் இந்தக் கல்லறை கி.மு. எட்டாம்

அல்லது ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகத் தேதியிடும்படி புதை பொருள் ஆராய்ச்சியாளர்களை மற்ற அம்சங்கள் வழிநடத்தியுள்ளன. இந்தக் கல்லறையில் கிறிஸ்து அடக்கம் பண்ணப்பட்டாரா என்பது மிகவும் சந்தேகத்திற்கு உரியதாகவே உள்ளது.

**வசனம் 61. மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும்** (யாக்கோபு மற்றும் யோசேப்பு ஆகியோரின் தாய்) யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரைப் பின்பற்றி கல்லறைக்குச் சென்றனர். "கலிலேயாவிலிருந்து அவருடனேகூட வந்திருந்த ஸ்திரீகளும்" என்ற லூக்காவின் பொதுவான குறிப்பு (லூக்கா 23:55), இவர்களில் சலோமெயும் இருந்திருப்பாள் என்று மறைமுகமாக உணர்த்தலாம் (27:56ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இந்தப் பெண்கள் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தார்கள். அடக்கம் பண்ணப்படுதலைக் கவனித்துக் கொண்டிருந்த இவர்கள், பண்டிகையின்போது தாங்கள் தங்கி இருந்த இடத்திற்குத் திரும்பிச் சென்றனர். ஓய்வுநாள் கடந்து சென்ற பின்பு இயேசுவின் உடலை அபிஷேகிப்பதற்கு, இவர்கள் வாசனைப்பொருட்களை ஆயத்தம் செய்தனர் (மாற்கு 16:1; லூக்கா 23:56).

## பிலாத்துவினால் தரப்பட்ட முன்னெச்சரிக்கைக் கட்டளை (27:62-66)

**62 ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து:**
**63 ஆண்டவனே, அந்த எத்தன் உயிரோடிருக்கும்போது, மூன்றுநாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகமிருக்கிறது.**
**64 ஆகையால், அவனுடைய சீஷர்கள் இராத்திரியிலே வந்து, அவனைக் களவாய்க் கொண்டுபோய், மரித்தோரிலிருந்து எழுந்தானென்று ஜனங்களுக்குச் சொல்லாதபடிக்கும், முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கும், நீர் மூன்றுநாள்வரைக்கும் கல்லறையைப் பத்திரப்படுத்தும்படி கட்டளையிடவேண்டும் என்றார்கள்.**
**65 அதற்குப் பிலாத்து: உங்களுக்குக் காவல்சேவகர் உண்டே; போய், உங்களால் கூடியமட்டும் பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள் என்றான்.**
**66 அவர்கள் போய்க் கல்லுக்கு முத்திரைபோட்டு, காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப் படுத்தினார்கள்.**

**வசனங்கள் 62, 63. ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாள்,** ஓய்வுநாளாக அல்லது சனிக்கிழமையாக இருந்தது. இந்த வேளையில் **பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவினிடத்தில் கூடிவந்து** இயேசுவின் - இவ்விடத்தில் அவர்கள் இயேசுவை **எத்தன்** என்று அழைத்தனர் - முன்னுரைத்தல் ஒன்றைப் பற்றி அவரிடத்தில் கூறினர்: **மூன்றுநாளைக்குப்பின் எழுந்திருப்பேன்.** இயேசு தமது பாடுகள் மற்றும் மரணத்திற்குப் பின்பு மூன்றாம் நாளில் தாம் மீண்டும் உயிரோடு எழும்பப் போவதாகத் தமது சொந்த சீஷர்களிடம் தனிப்பட்ட வகையில் கூறியிருந்தார் (16:21; 17:9, 22, 23; 20:18, 19). மற்ற வேளைகளில் அவர் இதேபோன்ற கூற்றுக்களை யூதத் தலைவர்களுக்கும் மக்களுக்கும்

*கூறியிருந்தார். வேதபாரகரும் பரிசேயர்களும் அவரிடத்தில் அடையாளம் ஒன்றைக் கேட்டபோது, யோனாவின் அடையாளம் மாத்திரமே அவர்களுக்குத் தரப்படும் என்று இயேசு கூறியிருந்தார். அந்தத் தீர்க்கதரிசி கடலின் மீன் வயிற்றுக்குள் இரவும் பகலும் மூன்று நாட்கள் இருந்தது போலவே, இயேசுவும் அந்த அளவு காலம் பூமியின் இருதயத்தில் இருப்பார் (12:40). அவர் தமது உடலைப் பற்றிப் பேசுகையில், "இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன்" என்று கூறியிருந்தார் (யோவான் 2:19). இந்தக் கூற்று, தங்களுக்கு இதற்கு முன் தெரியாது என்பது போன்று அவர்கள் இதற்கு முன் நடித்திருக்கையில் (26:61; 27:40), இந்த வேளையில் அவர்கள், அவர் தமது சொந்த உடலைப்பற்றியும் தாம் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கப்படுதலைப் பற்றியும் குறிப்பிட்டார் என்பதை முழுமையாகப் புரிந்துகொண்டவர்களாக இருந்தனர்.*

***வசனம் 64.*** *அவர்கள், அந்தத் தீர்க்கதரிசனத்தைச் சிந்தையில் கொண்டவர்களாக,* ***அவரது சீஷர்கள்*** *அவரது உடலைத் திருடிப் பின்பு அவர் உயிர்த்துவிட்டார் என்று அறிக்கை செய்துவிடாதபடி,* ***மூன்றுநாள்வரைக்கும் கல்லறையில்*** *காவல் வைக்கும்படி பிலாத்துவிடம் அவர்கள் வற்புறுத்தினர். அவர்கள்* ***முந்தின எத்தைப்பார்க்கிலும் பிந்தின எத்து கொடிதாகாதபடிக்கு இதைச் செய்ய வேண்டும்*** *என்று கூறிமுடித்தனர்.[6] அவர்களின் சிந்தித்தல் வகையில், இயேசு மேசியாவாக இருந்தார் என்ற அவரது உரிமைகோருதலை முந்தின எத்தாகவும், அவர் மரித்தோரில் இருந்து உயிர்த்தார் என்று கூறுதல் பிந்தின எத்தாகவும் இருந்தது. பிரதான ஆசாரியர்கள் சதுசேயர்களில் இருந்து வந்தவர்கள், மற்றும் இந்த யூதத்துவப் பிரிவினர் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொள்ளவில்லை என்பது நினைவில் வைக்கப்பட வேண்டும் (22:23; நடபடிகள் 23:8).*

*யூத அதிகாரிகளின் பிரதான அக்கறை அவசியமற்றதாக இருந்தது, ஏனெனில் இயேசு உயிர்த்து எழுவார் என்பதில் சீஷர்கள் (அப்போது) விசுவாசம் கொண்டிருக்கவில்லை (காண்க மாற்கு 9:10, 32; யோவான் 20:9). அவர் உயிர்ப்பிக்கப் பட்டிருந்தார் என்று மகதலேனா மரியாள் அறிக்கை செய்தபின்னும் கூட அதை அவர்கள் விசுவாசிக்கவில்லை (மாற்கு 16:11, 14). இயேசுவின் போதனையைக் காட்டிலும் அவரது உயிர்த்தெழுதல் என்பது - அந்த அறிக்கை உண்மையற்றதாக இருந்தாலும்கூட - யூதர்களின் அதிகாரத்திற்கு மாபெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்று அவர்கள் நினைத்தனர்.*

***வசனம் 65. பிலாத்து*** *அவர்களின் விருப்பத்திற்கு இணங்கி, கல்லறையில்* ***காவல் வைக்க*** *அவர்களுக்கு அனுமதி அளித்தார். பிலாத்துவிடம் யூதத்தலைவர்கள், சேவகர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர் என்ற உண்மையில் இருந்தும், 28:11-15ன் பிந்திய குறிப்பில் இருந்தும், இந்த மனிதர்கள் யூதர்களின் தேவாலயப் போர்ச்சேவர்கள் அல்ல, ஆனால் ரோமப்போர்ச்சேவகர்களாக இருந்தனர் என்பது தெளிவாகிறது. "காவல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (koustōdia) கிரேக்க வார்த்தை உண்மையில் custodia என்ற இலத்தீன் வார்த்தையின் ஒலியாக்கமாக உள்ளது.* "Custody" *மற்றும்* "custodian" *என்ற ஆங்கிலச் சொற்றொடர்கள் இந்த வார்த்தையில் இருந்தே தரவழைக்கப் பட்டுள்ளன.*

***வசனம் 66.*** *பிரதான ஆசாரியர்களும் பரிசேயர்களும் பிலாத்து*

அவர்களுக்குக் கட்டளையிட்டது போலவே, **போய்க்காவல்வைத்து, கல்லறையைப் பத்திரப்படுத்தினார்கள்** என்று கூறப்பட்டுள்ளது. அவர்கள் கல்லறைக்கு வெளியே ரோமக் **காவல்வீரர்களை நிறுத்திவைத்து, கல்லுக்கு முத்திரைபோட்டனர்.** இது அனேகமாக, அந்தக் கல்லின் குறுக்கே இழுத்துக் கட்டப்பட்டு **கல்லறையின்** முகப்பின் இருபுறத்திலும் இணைக்கப்பட்ட ஒரு கயிறாக இருந்திருக்கும். **அந்தக் கயிற்றின் மீது மெழுகு அல்லது களிமண் வைக்கப்பட்டு,** அதன்மீது அலுவலகரீதியான ரோமக் கையெழுத்தினால் முத்திரையிடப் பட்டிருக்கும். இப்படிப்பட்ட ஒரு முத்திரை, கல்லறைக்குள் நுழைந்து சேதப்படுத்தும் எவருக்கும் மரண தண்டனை கிடைக்கும் என்ற அச்சுறுத்தலைக் கொண்டிருக்கும்.

எந்தக் காவலும், கல்லறையைப் பத்திரப்படுத்தும் எந்தச் செயலும், உயிர்த்தெழுதலில் இருந்து இயேசுவைத் தடைசெய்ய இயலாது என்பதை பிலாத்துவும் யூதர்களும் உணர்ந்தறியவில்லை! அவர்கள் விரும்பியபடி, தவறான வதந்திகள் பரவுவதைத் தடைசெய்வதற்குப் பதிலாக, கல்லறையைக் காவல் செய்த செயலானது உண்மையில், உயிர்த்தெழுதலின் சத்தியத்தை உறுதிப்படுத்துவதாகவே இருந்தது.

---

குறிப்புகள்

[1]காண்க Josephus *Wars* 4.5.2; Mishnah *Shabbath* 23.4–5. [2]Leon Morris, *The Gospel according to Matthew,* Pillar Commentary (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1992), 728. [3]Tacitus *Histories* 5.5. [4]R. T. France அவர்கள் குறிப்பிட்டபடி, "புதிய கல்லறை என்பது, இதுவரையில் பயன்படுத்தப் பட்டிராத ஒன்று சமீபத்தில் கட்டி முடிக்கப் பட்டதாக இராது, அதில் எந்தப் பகுதியும் உபயோகப் படுத்தப்பட்டிருக்காது" (R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985], 403; இந்த விளக்கவுரையை காண்க 8:21; 26:3). [5]உருட்டும் கல் கொண்ட கல்லறைகள் பற்றிய அதிகமான தகவல்களுக்கு, Mark Strauss, "Luke," in *Zondervan Illustrated Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke* (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 496. என்ற புத்தகத்தில் காணவும். [6]"முந்தினதைக் காட்டிலும் பிந்தினது மோசமாக இருக்கும்" என்பது மரபுரீதியான சொல்விளக்கமாக இருந்தது (காண்க 12:45; 2 பேதுரு 2:20).